**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *கலாத்தியர்*

# *பாடம் 10 – பேதுரு மற்றும் மற்ற அப்போஸ்தலர்களுடன் சமம்*

***கலாத்தியர் 2:6-10, 6அல்லாமலும் எண்ணிக்கையுள்ள***
***வர்களாயிருந்தவர்கள் எனக்கு ஒன்றும் போதிக்கவில்லை;***
***அவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் எனக்குக்***
***கவையில்லை (அக்கறையில்லை), தேவன் மனுஷரிடத்தில்***
***பட்சபாதமுள்ளவரல்லவே. 7அதுவுமல்லாமல், விருத்த***
***சேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி***
***பேதுருவைப் பலப்படுத்தினவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்***
***தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினபடியால்,***
***8விருத்தசேதனமுள்ள அவர்களுக்குச் சுவிசேஷத்தைப்***
***பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல,***
***விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது***
***எனக்கும் கையளிக்கப்பட்டதென்று அவர்கள் கண்டு; 9எனக்கு***
***அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது, தூண்களாக***
***எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானும், தாங்கள்***
***விருத்தசேதனமுள்ளவர்களுக்கும், நாங்கள் புறஜாதிகளுக்கும்***
***பிரசங்கிக்கும்படி, அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு***
***அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் வலதுகை கொடுத்து,***
***10தரித்திரரை நினைத்துக்கொள்ளும் படிக்குமாத்திரம்***
***சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே***
***நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்.***

*பவுல், தன்னுடைய அப்போஸ்தல பதவியை தன்னுடைய அப்போதைய பிரசங்கத்தின் மூலமாகவும் தீத்துவின் விஷயத்தில் எருசலேமில் உள்ள அப்போஸ்தலர்கள் அவனை விருத்தசேதனம் செய்யவேண்டும் என்று*

*நாம் முந்தைய பாடத்தில் எப்படி தீத்துவை விருத்தசேதனம் செய்யவும் அல்லது மோசேயின் சட்டங்களையும் மரபுகளையும் பின்பற்ற கூறவில்லை என்பதையும் குறித்து பார்த்தோம்.*

*அதனால், பவுல் எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களால் அவருடைய செய்தி உறுதிப்படுத்தப்பட்டது என்பதை உறுதியாக நிறுவினார்.*

*இப்போது அவர் ஒரு படி முன்னேறிச் சென்று தான் பேதுருவிற்கும் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் சமமானவன் என்று கூறுகின்றார். மேலும் தேவனிடம் பாகுபாடு இல்லாத காரணத்தினால், ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான ஆணை இருப்பதாக கூறுகின்றார்.*

*V6,* ***அல்லாமலும் எண்ணிக்கையுள்ளவர்களாயிருந்தவர்கள் எனக்கு ஒன்றும் போதிக்கவில்லை; அவர்கள் எப்படிப்பட்ட வர்களாயிருந்தாலும் எனக்குக் கவையில்லை (அக்கறையில்லை), தேவன் மனுஷரிடத்தில் பட்சபாத முள்ளவரல்லவே****.*

*பவுல் இங்கு எருசலேம் சபையில் உள்ள அப்போஸ்தலர்கள் மற்றும் மூப்பரை குறித்து பேசுகிறார்.*

*ஒருவர் எவ்வளவு கனத்துக்குரியவராக இருந்தாலும் அதைக் குறித்து பவுலுக்கு எந்த வித்தியாசமும் இல்லை.*

***யாக்கோபு 2:1-9****,*

**கனத்துக்குரியவர்களைக் குறித்து பயப்பட வேண்டாம்.**

*ஒரு மனிதனின் வரலாற்றைக் குறித்தோ அல்லது அவர்களின் நற்கிரியைகளைக் குடிகோ தேவனை நம் பக்கம் நாம் திருப்பிவிடமுடியாது.*

*பேதுரு கோர்னிலியுவின் வீட்டிலே பிரசங்கிதித்துக் கொண்டிருக்கும்போதே பரிசுத்த ஆவியானவர் அங்கு இருந்த புறஜாதியார் அனைவர்மேலும் வந்து இறங்கினார்.*

***அப்போஸ்தலர் 10:34, அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும்.***

***2 கொரிந்தியர் 5:16-17, [16] ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம். [17] இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.***

*நாம் அப்போஸ்தலர் புத்தகத்தின் முதல் சில பக்கங்களில் இருந்து ஆரம்ப கால சபையில் பேதுரு எப்படி பட்ட சிறந்த மனிதர் என்பதையும் மக்கள் எவ்வாறு அவருக்கு மரியாதை கலந்த பயத்தை அளித்தனர் என்பதை பார்த்தோம்.*

- *யூதாஸின் இடத்தை நிரப்பக் கோரி பேதுரு தான் முதலில் கூறினார். (1:15-22)*
- *அவர் தான் யார் அப்போஸ்தலன் ஆகலாம் யார் ஆக முடியாது என்பதகான சட்டத்தை வகுத்தார் (1:21-22)*

- *அவர் தான் அக்கினி நாவுகளை பற்றி முழுவதுமாக விளக்கினார் (அது ஒரு எளிய காரியம் இல்லை). (2:14-36)*
- *அவருடைய அங்கீகார மறுப்பு அனானியாவையிம் (Ananias) சபிராவையும் (Sapphira) கொன்றது. அது தான் இறுதியானது **Ultimate!** (5:3-10)*
- *பேதுரு விசுவாசிகளின் மீது கரங்களை வைத்து அவர்கள் பரிசுத்த ஆவியானவரை பெறச் செய்தார். (8:17)*
- *அவன் சீமோனிடம் பணத்தினால் அனைத்தையும் பெற முடியாது என்பதை கூறினார். (8:20)*
- *புரஜாதியினரும் சுவிசேஷத்தில் பங்குள்ளவர்கள் என்பதை தேவனிடம் இருந்த பெற்ற தரிசனத்தின் மூலம் கூறினார். (10:11-15)*
- *தேவாலயத்தில் நடக்க முடியாத ஒரு முடவனை பேதுரு சுகமாக்கினார். (3:6-7)*
- *அவர் நடக்க முடியாமல் பக்கவாதத்தில் கிடந்த அணியாசிற்கு (Aeneas) மீண்டும் நடக்கப்பண்ணினார். (9:34)*
- *அவர் தபித்தாளை (Tabitha) மீண்டும் உயிர் பெறச் செய்யதார். (9:40)*

***அப்போஸ்தலர் 5:11 & 13,***

***11 சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று.***

[13] ***மற்றவர்களில் ஒருவரும் அவர்களுடனே சேரத் துணியவில்லை. ஆகிலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்கள்.***

*பவுல் சொன்ன அனைத்தையும் இவ்வாறாக சுருக்கலாம்.*

- ✓ *நான் வெறும் பிரசங்கி தான், அதற்கு மேல் ஒன்றும் இல்லை.*
- ✓ *என்னிடம் எந்த அதிகாரமும் இல்லை.*
- ✓ *எனக்கு இவ்வுலகின் மீது பூஜ்ஜியம் அதிகாரம் தான் உள்ளது.*
- ✓ *என்னுடைய கல்வி எனக்கு எந்த வித அதிகாரத்தையும் அளிக்கவில்லை.*
- ✓ *என்னுடைய மனது எனக்கு எந்த வித அதிகாரத்தையும் அளிக்கவில்லை.*
- ✓ *என்னுடைய அனுபவம் எனக்கு எந்த வித அதிகாரத்தையும் அளிக்கவில்லை.*
- ✓ *ஒரு சபையின் தலைவனாக எனக்கு எந்த வித அதிகாரமும் இல்லை.*
- ✓ *என்னுடைய நிலையானது எனக்கு எந்த வித அதிகாரத்தையும் அளிக்கவில்லை.*

*தேவனுடைய வார்த்தையினால் வரும் அதிகாரம் ஒன்றே என்னிடம் உள்ளது. மேலும் அதனை தான் உங்களிடம் செலுத்துகிறேன்.*

## அப்போஸ்தலனாகிய பவுலும் பேதுருவும் சமம்

**[7] அதுவுமல்லாமல், விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி பேதுருவைப் பலப்படுத்தினவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினபடியால்.**

**பவுலிடம் சுவிசேஷம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

***1 தீமோத்தேயு 1:12, என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ள வனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்.***

*பவுலிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டதை அவர் தீமோத்தேயுவிற்கு கடத்தினார்!*

*மேலும், பவுல் தீமோத்தேயுவிடம் இதனை மற்ற உண்மையான விசுவாசிகளுக்கு கடத்திவிடும் படிக்கு கட்டளை பண்ணினார்.*

***2 தீமோத்தேயு 2:2, அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.***

*நம்முடைய பணிகள் வெவ்வேறானவை.*

*பவுலும் பேதுருவும் வெவ்வேறான சுவிசேஷ பிரசங்கங்களை போதித்தனர் என தவறாக அர்த்தம் கொண்டனர்.*

*இல்லை.*

*அது அவர்களுடைய பிழை.*

*சுவிசேஷம் என்பது விருத்தசேதனம் செய்தவர்களுக்கும் செய்யாதவர்களுக்குமான பொதுவானதாகும்.*

- *அது விருத்தசேதனம் செய்தவர்களுக்கு மட்டுமானது அல்ல.*
- *அது விருத்தசேதனம் செய்தவர்களுக்கான சுவிசேஷமும் அல்ல.*

*சுவிசேஷமானது விருத்தசேதனம் செய்தவர்கள் மற்றும் செய்யாதவர்களுக்குமான பொதுவானதாகும். அது* ***ஒரே சுவிசேஷம் தான்.***

*யூதருக்கான உலகம் மற்றும் புரஜாதியாருக்கான உலகம் என இரண்டு உள்ளது. அதனால் தேவன் இரண்டு வகையான பிரசங்கிமார்களை தேர்ந்தெடுத்துள்ளார். ஒருவர் விருத்தசேதனம் செய்தவருக்கும் மற்றவர் விருத்தசேதனம் செய்யாதவருக்கும் பிரசங்கிக்க தேர்ந்தெடுத்தார்.*

*இருவரும் சமமானவர்கள். யாரும் தாழந்தவரோ உயர்ந்தவரோ இல்லை. ஆனால் வேலை வெவ்வேறானவை.*

***V8, (விருத்தசேதனமுள்ள அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று அவர்கள் கண்டு;)***

*பேதுருவை பெந்தகோஸ்தே நாளின் போது ஆட்கொண்ட பரிசுத்த ஆவியானவர், என்னோடும் வேலை செய்கிறார். இந்த அறிக்கையை தான் பவுல் மேற்கொள்கிறார்.*

*பவுல் அப்போஸ்தலர் புத்தகத்தின் பிந்தைய அதிகாரங்களில் பெந்தகோஸ்தே நாளிற்கு பின் செய்த பிரசங்கங்களினால் ஆயிரமாயிரம் மக்கள் மாறிவிட்டனர். அப்போஸ்தலனாக பேதுருவிலிருந்த அதே வல்லமை எனக்குள் இருக்கிறது என்பதை பவுல் வலியுறுத்துகிறார்.*

- ✓ *அதே சுவிசேஷம் தான் நம்மிடமும் உள்ளது.*
- ✓ *அதே பரிசுத்த ஆவியானவர் தான் நம்மிடமும் இருக்கின்றார்.*
- ✓ *அதே வல்லமை தான் நம்மிடமும் உள்ளது.*
- ✓ *எந்த வேறுபாடும் இல்லை.*

*"பேதுரு செய்த அதே அற்புதங்களை என்னால் செய்ய முடிந்தது.." என பவுல் கூறவில்லை.*

*அந்த வல்லமை எங்கிருந்து வருகிறது என்பதை பவுல் அறிந்திருந்தார். பேதுருவிடம் வேலை செய்த அதே தேவன் எனக்குள்ளும் வேலை செய்கிறார்.*

*பேதுருவின் வாழ்க்கையை கொண்டு தேவன் மக்களை சுகமாக்குதல், மரித்தோரிலிருந்து உயிர்ப்பிப்பது போன்ற பல அற்புதங்களை நடத்தியுள்ளார். தேவன் பவுலின் வாழ்க்கையை கொண்டும் அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்.*

*தேவனை அவருடைய வேலையை நம் மூலமாய் செய்ய விடுவதே இதன் இரகசியமாகும்!*

*ஒரு நாளிலிருந்து அதிக மணி நேரத்தை பிழிவது எப்படி என்பதை அறிவதில்லை. இது ஒரு நபரை கிறிஸ்துவிடம் வெற்றிகரமாக வழிநடத்த பத்து வழிமுறைகளை கற்றுக்கொள்வதல்ல.*

*தேவனை தேவனாக இருக்க விட்டு நீங்கள் பின் இருக்கையை எடுப்பதே ஊழியத்தின் இரகசிய வல்லமையாகும். பேதுருவிடமும் பவுலிடமும் இருந்த அதே வல்லமை உங்களுக்குள்ளும் உள்ளது!*

***ரோமர் 8:11, அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால்,***

***கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்***.

***பிலிப்பியர்*** *2:13,* ***ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்***.

*ஊழியத்தில் இரகசிய வல்லமை என்ற ஒன்று இருந்தால் அது வெறுமனே தேவனுடைய வழியில் இருந்து வெளியேற கற்றுக்கொள்வதோடு, அவரை வேலை செய்ய விடுவதும் தான்!*

***சகரியா*** *4:6,* ***அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.***

*V9,* ***எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது, தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், யோவானும், தாங்கள் விருத்தசேதனமுள்ளவர்களுக்கும், நாங்கள் புறஜாதிகளுக்கும் பிரசங்கிக்கும்படி, அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் வலதுகை கொடுத்து,***

*பவுலிடம் இருந்து வந்த இந்த வாக்கு ஒரு பெரிய அடிதான். அதுவும் ஜூடாயிசருக்கு அது ஒரு இறுதியான அடிதான்.*

*எனக்கு அருளப்பட்ட கிருபையை எருசலேமின் தலைவர்கள் அறிந்திருந்தார்கள்.*

*பவுலின் செய்தியை அவர்கள் நடைமுறையில் ஏற்றுக்கொண்டு தீத்துவை விருத்தசேதனம் செய்யும் படிக்கு வற்புறுத்தாதை நாம் முந்தைய பாடத்தில் பார்த்தோம்.*

*ஏன்?*

*ஏனென்றால் அது தேவையில்லை.*

*பேதுரு பிரசங்கித்த அதே சுவிசேஷத்தை தான் பவுலும் பிரசங்கிக்கிறார் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.*

*பரிசுத்த ஆவியானவரின் வல்லமை எருசலேமிலும் யூதேயாவிலும் பேதுரு செய்த ஊழியத்தின் மூலம் வெளிப்பட்டதை அவர்கள் அறிந்தனர்.*

*பரிசுத்த ஆவியானவரின் வல்லமை புரஜாதியினர் உலகத்தில் பவுல் செய்த ஊழியத்தின் மூலம் வெளிப்பட்டதையும் அவர்கள் அறிந்திருந்தனர்.*

*இரண்டு ஊழியங்களிலும் மக்கள் மன மாற்றப்பட்டு வந்தனர்.*

*அவர்கள் இருவரும் ஒரே ஆவியானவரால் ஆளப்பட்டு ஒரே சுவிசேஷத்தை தான் போதித்தனர்.*

*அந்த செய்தியில் எந்த ஒரு வேறுபாடும் இல்லை. பேதுருவின் மற்றும் பவுலின் வல்லமையில் எந்த ஒரு வேறுபாடும் இல்லை. இந்த முடிவை அனைவரும் அதிகாரப்பூர்வமாக ஒத்துக்கொண்டனர்.*

***யாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது****?*

*"யாக்கோபு," தேவனின் சகோதரன், எருசலேம் சபையின் தலைவன்.*

*மிகவும் மதிக்கப்படுபவரும் மற்றும் அப்போஸ்தலர்களின் தலைவருமான கேபாஸ் ("Cephas,") அல்லது "பேதுரு".*

*“யோவான்” இயேசுவால் நேசிக்கப்பட்ட சீஷன், இயேசு கிறிஸ்துவின் நெருங்கிய வட்டத்திற்குள் இருந்தவர்.*

*இவர்கள் மூவரும் தான் மிகவும் புகழ்பெற்ற மற்றும் நம்பகமான சபையின் தூண்கள். அவர்கள் தான் சபையின் முக்கிய தலைவர்கள். அவர்கள் எனக்கும் பர்னபாவிற்கும் வலதுகர ஐக்கியத்தை ஒப்புக்கொடுத்தார்கள்.*

*வலதுகர ஐக்கியம் (Right hand of fellowship), என்பது பவுல் மற்றும் பர்ணபாவுடன் ஒரு கூட்டுறவு கொள்வதாகும். மேலும் அந்த கூட்டுறவானது அவர்கள் அனைவரும் ஒன்றாக உள்ளனர் என்பதை குறிக்கும்.*

*நான் பாப்டிஸ்ட் தேவாலயத்தில் இருந்தபோது, அவர்கள் தேவாலயத்தின் புதிய உறுப்பினர்களோடு வலதுகர ஐக்கியத்துடன் (Right hand of fellowship) இணைக்கும் இந்த செயலை அவர்கள் முழு சபையின் சார்பாக செய்தார்கள்.*

- *உறுதிமொழி **affirmation**,*
- *உறுதிப்படுத்தல்,*
- *ஆதரவு.*

*“**எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது.**”*

*அது அழைப்பின் கிருபை!*

- *தமஸ்கு சாலையில் தேவனின் இரட்சிப்பிற்கான அழைப்பு. அது தான் கிருபை!*
- *கிருபை தான் அவரை அப்போஸ்தலனாகும் படி அழைத்தது.*
- *கிருபை தான் அவருக்கு மூன்று ஆண்டுகள் கற்றுக்கொடுத்தது.*

- *கிருபை தான் அவரை வல்லமையாக்கியது.*
- *கிருபை தான் விளைவை அளித்தது.*
- *எல்லாம் கிருபையே.*

***1 கொரிந்தியர் 9:17,* நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே**.

*ஒருவன் உண்மையுள்ளவனாகக் காணக்கூடிய காரியங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். பவுல் முடிவு வரை விசுவாசமாக இருந்தார்.*

*இறுதியில் நல்ல போராட்டத்தை போராடி, ஓட்டத்தை முடித்தேன் என்று கூறினாலும் அவர் தனது விசுவாசத்தை காத்துக்கொண்டார்.*

*அவருடைய ஊழியத்திற்கு கிருபை மட்டுமே காரணம்.*

*ஒரு பிரசங்கியோ அல்லது போதகரோ செய்த பிரசங்கத்தால் ஏதேனும் நடந்தால் அது அவருக்கு அளிக்கப்பட கிருபையே அதற்கான காரணமாகும். கிருபையினால் தான் மக்களின் ஆவிக்குரிய மனதை தட்டி எழுப்பிவிட முடியும். பரத்திலிருந்து வருவதன் மூலமே அனைத்து மாற்றங்களும் நடைபெறும்.*

*தேவனுடைய கிருபையால் மட்டுமே சுவிசேஷம் பரப்புவதற்கான காரணம்.*

*சபையின் ஸ்தாபனம் மற்றும் வளர்ச்சிக்கு தேவனின் கிருபை மட்டுமே காரணம்.*

*தேவனின் கிருபை மட்டுமே தேவனுடைய வார்த்தையின் வல்லமைக்கு உயிர்தந்து மக்களை மன மாற்றும்.*

*V8,“***தாங்கள் விருத்தசேதனமுள்ளவர்களுக்கும், நாங்கள் புறஜாதிகளுக்கும் பிரசங்கிக்கும்படி.”**

***அப்போஸ்தலர் 9:15,* அதற்குக் கர்த்தர்: நீ போ*;* அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்**.

*பவுலுக்கு தேவனால் அழைப்பு கொடுக்கப்படுகின்றது. மேலும் எருசலேமின் தலைவர்கள் அவரைக் கூப்பிட்டு தேவன் அழைத்த அழைப்பில் உறுதியாக நிற்கும்படி அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.*

*அவர்கள் ஒரு காரியத்தைச் செய்யும்படி அவரிடம் கேட்கிறார்கள். அவர்கள் கேட்ட ஒரே விஷயம், ஏழைகளை நினைவில் வைத்திருங்கள் என்பது!*

*இது ஜூடாய்ஸருக்கு (Judaizers) எதிரான ஒரு கடைசி அடி ஆகும்.*

*எருசலேமில் உள்ள தலைவர்கள் என்ன சொல்லவில்லை என்றால்,*

- ✓ *தீத்துவை விருத்தசேதனம் செய்ய*
- ✓ *தீத்துவை ஞானஸ்நானம் பெறச் செய்ய முடியுமா?*
- ✓ *அல்லது மற்ற வகையான பாரம்பரிய காரியங்களை கடைபிடிக்க முடியுமா?*

**இல்லை**.

*V10,* ***தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்குமாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்.***

*பவுலின் வாழ்க்கையை நாம் படிக்கும்போது, அவர் அதனை தொடர்ந்து தன் ஊழியத்தில் கடைபிடித்ததை நாம் காணமுடியும்!*

*ஆரம்பகால சபைகளில் அவர்கள் எல்லாவற்றையும் பொதுவாக கொண்டிருந்தார்கள், மேலும் யாருக்கேதும் ஏதேனும் தேவை வந்தால், யாராவது ஏதாவது ஒன்றை விற்று அவர்களது தேவைகளை பூர்த்தி செய்வார்கள்.*

***அப்போஸ்தலர் 2:44-45,*** *[44]* ***விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள.*** *[45]* ***காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்.***

*அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தில், போதுமான அளவிற்கு இல்லாத விதவைகள் இருந்தார்கள். மேலும் அந்த விதவைகளை கவனித்துக் கொள்ளவதை உறுதிப்படுத்த ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள். போதுமான அளவை பெற்றவர்கள் இல்லாதவர்களுக்கு வழங்கினர். அவர்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்தனர்.*

*பதினான்கு ஆண்டுகள் நடுவில் சில சமயங்களில் பவுல் இதனை செய்தார். யூதேயாவின் பஞ்சத்தில் உள்ளவர்களுக்கு அவர் நிவாரணம் கொண்டு சேர்த்தார்.*

***ரோமர் 15:25-27,*** *[25]* ***இப்பொழுதோ பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்யுங்காரியமாக நான் எருசலேமுக்குப் பிரயாணம் பண்ண எத்தனமாயிருக்கிறேன்.*** *[26]* ***மக்கெதோனியாவிலும்***

***அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான் களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள்சகாயம் செய்ய விருப்பங் கொண்டிருக்கிறார்கள்;*** [27] ***இப்படிச்செய்வது நல்லதென்று எண்ணினார்கள்; இப்படிச் செய்கிறதற்கு அவர்கள் கடனாளி களாயுமிருக்கிறார்கள். எப்படியென்றால், புறஜாதியார் அவர்களுடைய ஞானநன்மைகளில் பங்கு பெற்றிருக்க, சரீரநன்மைகளால் அவர்களுக்கு உதவிசெய்ய இவர்கள் கடனாளிகளாயிருக்கிறார்களே.***

*பவுல் தன்னுடைய மிஷனரி பயணத்தில் எப்பொழுதும் எருசலேமில் உள்ள ஏழை பரிசுத்தவான்களை மனதில் வைத்திருந்தார்.*

***ஏன் எருசலேமில் ஏராளமான ஏழைகள் இருந்தார்கள்****?*

*பெந்தேகோஸ்தே நாளன்று எருசலேமில் பஸ்கா பண்டிகையை கொண்டாடுவதற்கு, மத்தியதரைக் கடல் முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான நூற்றுக்கணக்கான யூதர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் அங்கு யாத்திரிகர்களாக இருந்தனர். அவர்கள் அங்கு மன மாறினார்கள். உலகில் வேறு எங்கும் சபை ஏதும் இல்லாத காரணத்தால் அவர்கள் அங்கு தங்கினார்கள். அவர்கள் எருசலேமில் உள்ள மக்களால் கவனிக்கப்பட வேண்டியதாய்யிருந்தது.*

*எருசலேமில் கிறிஸ்தவனாக இருப்பது என்பது மிகவும் கடினமாகும். நீங்கள் உங்களுடைய வேலையை இழக்க நேரிடும். உங்கள் குடும்பம் உங்களை துன்புறுத்தும். உங்கள் அதிகாரிகள் நீங்கள் கிறித்தவனாக மாறிவிட்டீர்கள் என்பதை அறிந்தவுடன் உங்களிடம் ஆதாரம் இல்லாமல் போகும்.*

*பெந்தேகொஸ்தே நாளிற்கு பின்னர் கிறிஸ்தவனாக இருப்பது என்பது மிகவும் கடினமாகும்.*

அப்போஸ்தலர் புத்தகத்தின் எட்டாம் அதிகாரத்தை வாசியுங்கள். திடீரென தொந்தரவு வந்து மக்கள் கொல்லப்பட்டனர். அப்போஸ்தலனாகிய யாக்கோபு மற்றும் ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டனர். யூத உயர் அதிகாரிகளின் விரோதத்தினால் எருசலேமில் கிறிஸ்தவனாக இருப்பது என்பது மிகவும் கடினம்.

எனவே, அவர்கள் வேறு எங்காவது வாழ்கிற மக்களுக்காக அக்கறை காட்ட பிரச்சனையாக இருந்தது. அதனால் அவர்கள் மாற்றப்பட்ட எருசலேமிலேயே அவர்கள் தங்கி சபையின் அங்கத்தினர்களானார்கள்.

பவுல் எங்கு சென்றிருந்தாலும், எருசலேமிர்காக பணம் சேகரித்து கொண்டு வந்து கொடுத்தார்.

எருசலேமிலிருந்த ஏழை எளிய பரிசுத்தவான்களுக்கு மசிதொனியா (Macedonia) மற்றும் அகாயா (Achaia) பகுதிகளில் இருந்து காணிக்கையை சேகரிப்பது தனக்கு சந்தோஷத்தை அளிப்பதாக கூறினார். அவர்கள் அவ்வாறு செய்வதற்கு மகிழ்ச்சியடைந்தார்கள், அவர்களுக்குடன்பட்டிருக்கிறார்கள். தேவன் இந்த வேலையை ஆரம்பித்த எருசலேமிலிருந்த பரிசுத்தவான்களுக்கு அவர்கள் கடன்பட்டிருந்தார்கள், மேலும் பணத்தை அனுப்புவதில் அவர்கள் சந்தோஷப்பட்டார்கள்.

பவுல் எங்கு சென்றாலும், அவர் வசூல் செய்ததாக கூறுகிறார். நீங்கள் கொடுங்கள், தாராளமாக கொடுக்க வேண்டும் என பவுல் கொரிந்தியர்களிடம் கூறினார்.

*2* **கொரிந்தியர்** *9:6-7,* [6]**பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.** [7]**அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில்**

***நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.***

***1 கொரிந்தியர் 16:1-4, [1]பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். [2]நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன். [3]நான் வரும்போது உங்கள் உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டுபோகும்படிக்கு, நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் நிருபங்களைக் கொடுத்து, அவர்களை அனுப்புவேன். [4]நானும் போகத்தக்கதானால், அவர்கள் என்னுடனேகூட வரலாம்.***

*அது வெறும் அன்புதான்.*

*ஒரு கிறிஸ்தவர் தேவனை நேசிக்கிறார், அவர் தேவனை முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும், பலத்தோடும் நேசிக்க விரும்புவராக இருக்கிறார்.*

*அவர் தேவனை நேசிக்கிறார், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நேசிக்கிறார், அவர் ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்த ஆவியையும் நேசிக்கிறார்.*

*நீங்கள் யாரையேனும் நேசிக்கிறீர்களானால் அவர்களைப் பிரியப்படுத்த விரும்புவீர்கள்.*

*நீங்கள் யாரையாவது காதலிக்கிறீர்களானால், அவரைப் பிரியப்படுத்த உங்களால் முடிந்த அனைத்தையும் செய்வீர்கள்.*

***யோவான் 14:15, நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.***

*நாம் ஒருவரையொருவர் நேசிக்கிறோம். ஏழைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய நீங்கள் கட்டாயப்படுத்த வேண்டியதில்லை.*

***சங்கீதம் 119:97, உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்.***

*உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், மனதோடும், பலத்தோடும் உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூருவதே முதல் கட்டளை.*

*இரண்டாவது கட்டளையானது, உங்களைப் போன்றே உங்கள் நண்பரையும் நேசிக்க வேண்டும்.*

***மத்தேயு 22:37-40, [37] இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக;***
***[38] இது முதலாம் பிரதான கற்பனை. [39] இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. [40] இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்.***

*நாம் விசுவாசிகளாகிவிட்டதால் நாம் இப்போது சட்டத்தை மீறுபவர்களாக இருக்கிறோமா?*

*இல்லை.*

*நாம் விருத்தசேதனம், சடங்குகள், சட்டங்கள், வெளிப்புற சட்டங்கள், சடங்குகள் மற்றும் பரம்பரை மரபுகள் ஆகியவற்றிற்கு கவனம் செலுத்தவில்லை.*

*ஆனால் தார்மீக சட்டம் நாம் விரும்பும் தேவனின் பிரதிபலிப்பாகும், எனவே நாம் தேவனைப் பற்றிய*

*எல்லாவற்றையும், அவரது மகிமையை பிரதிபலிக்கும் அனைத்தையும் நேசிக்கிறோம்.*

*பவுல் நம்மிடமும் கலாத்தியரிடமும் இவற்றை கூறுகிறார்,*

- *நான் ஒரு உண்மையான அப்போஸ்தலன்,*
- *நான் உண்மையான நற்செய்தியை பிரசங்கிக்கிறேன்,*
- *என்னுடைய தனிப்பட்ட சாட்சி அதனை உறுதிப்படுத்துகின்றது, மேலும்*
- *எருசலேமில் உள்ள சபையில் உள்ள அப்போஸ்தலர்களும் தலைவர்களும் உறுதிப்படுத்தினர்.*

*இந்த பகுதியை இவ்வாறாக நாம் நிறைவு செய்கிறோம்.*

- ✓ *பவுல் ஒரு அப்போஸ்தலன்.*
- ✓ *பேதுரு பிரசங்கித்த அதே சுவிசேஷத்தை பவுலும் பிரசங்கித்தார்.*
- ✓ *பேதுருவிடம் இருந்த அதே வல்லமையை கொண்டு பவுலும் செயல்பட்டார்.*
- ✓ *பெந்தேகொஸ்தே நாளின் போது பேதுருவின் வல்லமையான பிரசங்கத்தினால் ஆயிரக்கணக்கானோர் இரட்சிக்கப்பட்டனர்.*
- ✓ *எனவே அவர் எருசலேம் சபை மற்றும் அதன் தலைவர்கள் மூலமாக உறுதி செய்யப்பட்டார்.*